உள்முகச் சிரிப்பு

என்னைக் களிமண்
என்றபொழுது
வேடிக்கையாயிருந்தது

ஏளனச் சிரிப்புகளுக்கிடையில்
அவர்களின் அறைகளை
நோட்டமிடுகிறேன்

புத்தக அடுக்குகள்
நிலைப்பேழை
நெடிய சுவர்
இப்படியாய்
ஒவ்வொருவரின் அறையினிலும்
விதவிதமாய்
நானிருக்கையில்
இதழ் மூடிச்
சிரிக்கத் தோன்றுகிறது

குப்பை தேங்கிய
நதியோரத்தில்
சுற்றும் பிடிப்பின்றிதான்
என்னைக் குடைந்தார்கள்
என்னை மிதித்தார்கள்
என்னைப் பிசைந்தார்கள்
சுவரின் மீது
வீசியெறிந்தார்கள்

மீண்டும் கலைத்தார்கள்

அவர்களின் அறைகளில்
நான் வசிப்பதைப் பார்த்தால்
அவர்கள்
வேறு மாதிரியாய்ச் சிரிக்கிறார்களோ
என்றெண்ணத் தோன்றுகிறது !

ஜாசின் ஏ. தேவராஜன்